# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2249/16 - 2021 ඔක්තෝබර් මස 13 වැනි බදාදා - 2021.10.13

*2249/16 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்***

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர், பசில் ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப்பண்ட இனம் தொடர்பில் அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப்பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2021, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 06 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதும் 2021, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய 2225/13 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான உருளைக்கிழங்குகள் (இ. மு. தலைப்பு 0701.90) தொடர்பான கட்டளையானது 2021, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறுமாறு இரத்துச் செய்யப்படுகின்றது.

**பசில் ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, ஒற்றோபர் 13.

1 A - PG 5577 - 495 (2021/10)

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| | *இ.மு தலைப்பு* | *இ.மு குறியீடு* | *விவரணம்* | |
| *1* | *07.01* | *0701.90* | *உருளைக்கிழங்கு - பிற* | *கிலோகிராமிற்கு 50.00 ரூபா* |
| *2* | *07.13* | *0713.40.11* | *மைசூர் பருப்பு (சிவப்புப் பருப்புக்கள்) - முழுமையானவை* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *0713.40.12* | *மைசூர் பருப்பு (சிவப்புப் பருப்புக்கள்) - பிளக்கப்பட்டவை* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *0713.40.21* | *மஞ்சள் பருப்புக்கள் - முழுமையானவை* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *0713.40.22* | *மஞ்சள் பருப்புக்கள் - பிளக்கப்பட்டவை* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| *3* | *17.01* | | *கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான (சுக்றோஸ்) வெல்லமும் திண்மையான உருவில்* | |
| | | | *பதனிடப்படாத சீனி, மேலதிக மணமூட்டப்படாதவையும் நிறமூட்டப்படாதவையும்* | |
| | | *1701.12* | *பீற் வெல்லம்* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *1701.13* | *கரும்பு வெல்லம்* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *1701.14* | *பிற கரும்பு வெல்லம்* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | | *பிற* | |
| | | *1701.91* | *மேலதிக மணமூட்டப்பட்டவை அல்லது நிறமூட்டப்பட்டவை* | |
| | | *1701.91.10* | *வெல்லம்* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *1701.91.90* | *பிற* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *1701.99* | *பிற* | |
| | | *1701.99.10* | *வெள்ளைப் பளிங்குருவான கரும்பு வெல்லம்* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *1701.99.20* | *வெள்ளைப் பளிங்குருவான பீற் வெல்லம்* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *1701.99.30* | *பிற வெல்லம்* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |
| | | *1701.99.90* | *பிற* | *கிலோகிராமிற்கு 25 சதம்* |

*10 - 439*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.